## திராவிட மாடலுக்குப் பாராட்டுப் பத்திரம்!

இந்திய அளவில் தொழில் மற்றும் கல்வி வளர்ச்சியில் 'தமிழ்நாடு' சாதனை படைத்துள்ளதாக ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் சமர்ப்பித்த அந்த அறிக்கையில், "தமிழ்நாடு இந்தியாவின் தோல் பொருட்கள் மற்றும் காலணிகள் உற்பத்தியில் 38 சதவிகிதம் பங்களிப்பையும், இந்தியாவின் மொத்த தோல் பொருட்கள் ஏற்றுமதியில் 47 சதவிகிதம் பங்களிப்பையும் வழங்கியுள்ளது. தோல் பொருட்கள் உற்பத்தித்துறையில் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை தமிழ்நாடு உருவாக்கியுள்ளது" என குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரிய காலணி உற்பத்தியாளர்களை ஈர்ப்பதற்கும், கிராமப்புறங்களில் தொழிற்பேட்டைகளை உருவாக்கவும் எடுத்துள்ள முயற்சிகள் இந்த ஆய்வறிக்கையில் பாராட்டப்பட்டுள்ளன. அதேபோல, 'இல்லம் தேடி கல்வி திட்டம்' ஒரு புதுமையான முயற்சியாக உள்ளது. கொரோனா-19 பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட கல்வி இடைவெளியைக் குறைப்பதற்காக, இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தால் குழந்தைகளிடம் கற்றல் திறன் அதிகரித்துள்ளது. மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் வகுப்பறைகளில் பங்கேற்கின்றனர். கணிதம் மற்றும் மொழித்திறன் மேம்பட்டுள்ளது" என்றும் ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இவையெல்லாம் திராவிட மாடல் அரசின் நிர்வாக மேன்மைக்குக் கிடைத்த சான்று. கொள்கை எதிரிகளும் புறக்கணிக்க முடியாத பணிகளை கடந்த மூன்றாண்டுகளில் திராவிட மாடல் அரசு செய்திருக்கிறது என்பதற்கான அங்கீகாரம்!

## ஃப்ளாஷ்பேக்





அ.பன்னீர் செல்வம்

### ஆளுமைகளுடன் எடுத்துக் கொண்ட புகைப்படம்!

1996-ஆம் ஆண்டு ஜூலை 9 அன்று கழக மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளராக நண்பர் மா.தயாளமூர்த்தி அவர்கள் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற என்னையும் உடன் அழைத்துச் சென்றார். அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் எங்களை வாழ்த்தி வரவேற்று, தலைவர் கலைஞரைச் சந்திக்க வழிவகை செய்தார். அப்போது இருபெரும் ஆளுமைகளுடன் எடுத்துக் கொண்ட புகைப்படம் இது..

**– அ.பன்னீர் செல்வம், மேனாள் ஒன்றிய கழகச் செயலாளர், கல்வராயன் மலை வடக்கு, கள்ளக்குறிச்சி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### நேருவுக்கு கருப்புக் கொடி!

1957-ஆம் ஆண்டு, டிசம்பர் மாத இறுதியில் நாகர்கோயிலில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில், பெரியாரை இழிவாகப் பேசியதற்காக தமிழ்நாடு வரும் நேருவுக்கு, கருப்புக்கொடி காட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எப்படியாவது ஆர்ப்பாட்டத்தை நிறுத்த வேண்டும் என முதலமைச்சர் காமராஜர் பல வழிமுறைகளைக் கையாண்டார். "சண்டே அப்சர்வர்" பாலசுப்ரமணியம் மூலம் கருப்புக் கொடி வேண்டாம் அல்லது ஒரு இடத்தில் மட்டும் பிடிக்கலாம் என்று அண்ணாவிடம் தூது விட்டனர். ஆனால், அண்ணா அதற்கு இணங்காத நிலையில், 04.01.1958 மாலை அண்ணா, கலைஞர் உள்பட முக்கிய தலைவர்கள் முன்கூட்டியே கைது செய்யப்பட்டனர்.

# மாநாடு

ர.பிரகாசு **49**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்





## "வள்ளுவரைப் போற்றுவோம்!"

1949-ஆம் ஆண்டு சென்னையில், தமிழறிஞர்களைக் கூட்டி, திருக்குறள் மாநாடு நடத்திய பெரியார், அதன்பின்பு திருக்குறளை மக்கள்மயப்படுத்தும் முயற்சியில் முழுவீச்சில் ஈடுபட்டார். அதற்காக மாவட்ட அளவிலான மாநாடுகளை நடத்தினார். அதில் ஒன்றுதான் இராமநாதபுரம் மாவட்ட 'முதலாவது திருக்குறள் மாநாடு'. 03.04.1949 அன்று விருது நகரில் உள்ள முத்து டாக்கீசில் மாநாடு நடைபெற்றது. மதுரை, இராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

காலை 8.30 மணிக்கு எம்,எஸ்.பி. நாடார் தங்க மாளிகையில் இருந்து மாநாட்டு ஊர்வலம் தொடங்கியது. மாநாட்டுத் தலைவர் சோமசுந்தர பாரதியார், தந்தை பெரியார், பாரதிதாசன் ஆகிய மூவரும், இரட்டைக் குதிரைகள் பூட்டிய சாரட் வண்டியில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். நகரின் முக்கிய தெருக்கள் வழியாகச் சென்ற ஊர்வலம் காலை 9.45 மணிக்கு, மாநாட்டுப் பந்தலை வந்தடைந்தது.

வரவேற்புரையாற்றிய இலக்குவனார், "குறளின் மேன்மையை வெளிநாட்டினர் கூட அறிந்து வைத்துள்ளார்கள். ஆனால் நம் நாட்டில்தான் இல்லை. வள்ளுவர் தந்த குறளினை, நாட்டின் நாலா பக்கமும் பரப்பி வருபவர், நம் பெரியார் அல்லவா! இதற்கு முன் குறள் மாநாடு அல்லது கூட்டம் என்றால், 10 புலவர்களும், 10 மாணவர்களும் கூடுவார்கள்" என்று அக்காலகட்டத்தைப் படம்பிடித்தார்.

மாநாட்டைத் திறந்துவைத்து பேசிய புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், "தமிழர்கள் அனைவரிடத்திலும் இன்று கீதையை- இராமாயணத்தை - மற்ற புராணங்களை விட்டு, எங்கள் நாட்டுக்கு ஒரு நீதி நூல் உண்டு; அதை நாங்கள் மட்டுமல்ல, உலக மக்கள் அனைவரும், எந்த ஜாதியினரும், எந்த மதத்தினரும் வரவேற்கும் தன்மையுடையது; வரவேற்றுப் பயனும் பெற்றுள்ளனர். அதுதான் எங்கள் திருக்குறள்" என்று உணர்ச்சிபொங்க பேசினார். மாநாட்டுத் தலைவர் சோமசுந்தர பாரதியார், பலத்த ஆரவாரம் கைதட்டலுக்கு இடையே திருக்குறள் ஆராய்ச்சி உரை நிகழ்த்தினார். அதற்கு முன்பு திருக்குறள் ஆராய்ச்சி உரையை அப்பகுதி மக்கள் கேட்டிருக்க வாய்ப்பே இருந்திருக்காது.

**திருக்குறள் மாநாடு, அதுசார்ந்த விழாக்களை, திருச்சி வானொலி நிலையம் ஒளிபரப்ப வேண்டும்' ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

அதன்பிறகு, சுமார் ஒன்றரை மணி நேரம் சொற்பொழிவாற்றிய பெரியார், "ஆரியர்கள் எழுதி வைத்த நூல்கள் எல்லாம் நம்மை இழிவுபடுத்துகின்றன. குறள் ஒன்றே உயர்ந்த நீதிநெறிகளை மக்களுக்கு எடுத்துக் கூறும் நூல்." என்றார். "இராமாயணம், மகாபாரதத்தை எதிர்க்கும் சுயமரியாதைக்காரர்கள், திராவிடர் கழகத்துக்காரர்கள் திருக்குறளை மட்டும் ஆதரிக்கிறார்களே"ஏன் என்றால், அதுமட்டும்தான் நம் நாட்டு மக்களின் வாழ்க்கையை வளமாக்கும் வகையில் வகுக்கப்பட்ட நீதி நூல்" என பேரறிஞர் அண்ணா பேசினார். புலவர் சேதுரகுநாதன், என்.வி.நடராசன் போன்றோரும் திருக்குறளின் பெருமைகளை எடுத்துரைத்தனர்.

"தற்போதுள்ள கல்வித்திட்டத்தில் உயர்நிலைப் படிப்பு தொடங்கி, பி.ஏ. வரை திருக்குறளை முழுமையாகப் படிக்கும் வரை பாடத்திட்டத்தை வகுக்க வேண்டும், ஆட்சி மன்ற உறுப்பினர் மற்றும் கல்லூரித் தலைவர் பொறுப்புக்கு வருவோருக்குக் கட்டாயம் திருக்குறள் புலமை இருக்க வேண்டும், திருவள்ளுவர் விழாவுக்கு, என ஒரு நாளை நியமிக்க வேண்டும், திருக்குறள் மாநாடு, அதுசார்ந்த விழாக்களை, திருச்சி வானொலி நிலையம் ஒளிபரப்ப வேண்டும்' ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

இப்போது பாடத்திட்டங்களில் திருக்குறள் வந்துவிட்டது, திருவள்ளுவர் தினம் வந்துவிட்டது.

**...கூட்டம் திரளும்**


# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ் **49**

**"புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## தடை செய்யப்பட்ட புத்தகம்!

இந்திய, அரசியல் விடுதலை பெற்ற பிறகும், காந்தி படுகொலை செய்யப்பட்ட பிறகும், காந்தியின் கொலைக்கு நீதி கேட்ட நூல் ஒன்று அது கொண்டிருந்த கருத்துக்காகத் தடை செய்யப்பட்டது. அதை எழுதியவருக்கு 'ஆறுமாதம் கடுங்காவல் - அபராதம் ரூபாய் ஐந்நூறு!' என்று தீர்ப்பளித்தார் முசிறி சப்-மாஜிஸ்டிரேட். சிறையில் அவருடைய சிகை சிரைக்கப்பட்டது, 30.01.1950 'திராவிட நாடு' இதழின் முதல் பக்கத்தில் அந்தப் படத்தை வெளியிட்டு 'அகிம்சா ஆட்சியின் அழகினைப் பார்' என்று தலைப்பிட்டார் பேரறிஞர் அண்ணா.





உத்தமர் காந்தியைக் கொலை செய்த நாதுராம் விநாயக் கோட்சேவின் பின்னணியினையும், வரலாறு முழுக்க அந்தப் பின்னணி கொண்ட ஆரியர்கள் நிகழ்த்திய வன்முறைகளையும் துரோகம் நிறைந்த நுண்முறைகளையும் தொகுத்து, 'காந்தியார் சாந்தியடைய' என்கிற சிறு நூலை விருதுநகரில் இருந்து வெளியிட்டார் கழக முன்னோடி ஏ.வி.பி. ஆசைத்தம்பி. காந்தியின் மறைவுக்கு நீதி கேட்டு, காங்கிரஸ் இயக்கத்தவரை நோக்கி எழுதப்பட்ட 12 பக்க நூல் அது.

இன்றைக்கு காந்தியைக் கொன்ற கயவர்களின் கூட்டாளிகள் இந்திய ஒன்றியத்தில் ஆட்சி செய்து வரும் நிலையில், மீண்டும் இந்நூலை வாசிப்பதும் அது குறித்து, சிந்திப்பதும் அவசியமாகிறது. ஆசைத்தம்பி அவர்கள் எழுதிய 'காந்தியார் சாந்தியடைய' என்ற நூலுடன், காந்தி பற்றிய மேலும் சில கட்டுரைகளை இணைத்து, இந்தச் சம்பவத்தின் பின்னணியையும் விளக்கி நூலாக்கியுள்ளார் பத்திரிகையாளர் ப.திருமாவேலன். 'மாற்று பதிப்பகம்' இந்நூலை வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான், இந்துஸ்தான், காந்திஸ்தான் என்ற சொற்களுக்குள் புதைந்துள்ள பெரும் வரலாற்றை, இந்நூல் நமக்குத் தொகுத்தளிக்கிறது. குறிப்பாக, காந்தியையும் அவர்தம் கொள்கைகளையும் தீவிரமாக எதிர்த்து வந்த, திராவிட இயக்கத் தலைவர்கள், ஹிந்து மதவெறி பிடித்த தீவிரவாதியால் காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட பிறகு, எத்தகைய நிலைப்பாட்டினை எடுத்தனர் என்பதை, மிக விரிவாகவே பேசுகிறது இந்நூல்.

**சம்பூகனை ராமன் ஏன் கொன்றான், காந்தியார் கொலைக்கு அது தான் காரணம் என்றும், 'இருந்தவர் ஆரிய காந்தி, இறந்தவர் திராவிட காந்தி' என்றும் தூத்துக்குடியில் நடைபெற்ற திராவிடர் கழக 18-வது மாநில மாநாட்டில் பேசினார், தந்தை பெரியார்.**

சம்பூகனை ராமன் ஏன் கொன்றான், காந்தியார் கொலைக்கு அது தான் காரணம் என்றும், 'இருந்தவர் ஆரிய காந்தி, இறந்தவர் திராவிட காந்தி' என்றும் தூத்துக்குடியில் நடைபெற்ற திராவிடர் கழக 18-வது மாநில மாநாட்டில் பேசினார், தந்தை பெரியார். இதைத் தொடர்ந்து 'குடிஅரசு' உள்ளிட்ட திராவிட இயக்க இதழ்கள் காந்தியைப் புகழ்ந்தும், கொலைக்குக் காரணமான இந்துமத வெறியைக் கண்டித்தும் எழுதின.

ஆசைத்தம்பியின் நூல், அனைத்திற்கும் மகுடம் வைத்தார் போல் அமைந்தது. அதை எழுதியமைக்காக தடை, கைது, வதை என அன்றைய அதிகாரத்தின் வெகுமதிகளையும் அவர் பெற நேர்ந்தது. இருந்தும், தமிழ்நாடு முழுக்க இந்த நூல் படிக்கப்பட்டது, கையெழுத்துப் பிரதியாக எழுதி, பொது இடங்களில் விநியோகம் செய்தனர் தி.மு.க.வினர்.


திராவிட இயக்கம், காந்தி மறைவிற்கு எப்படி அஞ்சலி செலுத்தியது என்பதை அறிய விரும்பும் ஆளுநர் ஆர்.என்.ரவி போன்றவர்கள், அவசியம் வாசிக்க வேண்டிய நூல்.

**...வாசிப்போம்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**739**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்





-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131